**எ.ம.சா. 1 பழனிச்சாமி** **Trust.O.P.No. 61/2023** 11.03.2026.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் இவ்வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். இவ்வழக்கில் 3ம் எதிர்மனுதாரர் மற்றும் தற்போதுள்ள இதர டிரஸ்டிகளுக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மற்ற டிரஸ்டிகள் விபரம் கூறவில்லை என்றால் சரிதான். இந்த டிரஸ்ட் ஒரு பப்ளிக் டிரஸ்ட் என்றால் எனக்கு பூர்வீக சொந்த டிரஸ்ட் ஆகும். இந்த டிரஸ்ட்டானது பொது காரியத்திற்காக ஏற்படுத்தப்பட்ட டிரஸ்ட் என்றால் சரிதான். 17.07.1917ம் தேதி டிரஸ்ட் ஆவணத்தில் என்னென்ன பொதுக்காரியங்கள் செய்ய வேண்டும் என்று கூறி தர்ம காரியங்களை செய்வதற்காக டிரஸ்ட் உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் இந்த டிரஸ்ட் பொது டிரஸ்ட் என்றாலும், தனிநபர் டிரஸ்ட் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.3 ஆவணம் 1ம் எதிர்மனுதாரருக்கு ஏற்படுத்திக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ஆனது வருவாய் துறை நடவடிக்கைக்கு பிறகுதான் 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியவந்தது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 எழுதிக் கொடுத்த போது முந்தைய ஆவணங்கள் பற்றி 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் அனைத்தும் தனிப்பட்ட சொத்துக்கள் அல்ல என்று சொன்னால் டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். மனுவில் கூறப்பட்டுள்ள சொத்தில் மனுதாரருக்கோ, எங்களுக்கோ உரிமையில்லை என்றால் சரியல்ல. 04.09.1968ம் தேதி பி.வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி டிரஸ்ட் செயல்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி டிரஸ்ட்படி தர்ம காரியங்கள்

செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.4 முதல் எ.ம.சா.ஆ.7 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.